[2022 ஏப்ரல் 19

(ஆ) பிலிப்பைன்ஸ், சீன நாடுகளில் மருத்துவக் கல்வி பயின்ற மாணவர்களுக்கு தமிழகத்தில் internship அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கொண்டு வந்த* 'NEET' *தேர்வின் காரணமாக இங்கே புற்றீசல்போன்று இன்றைக்கு பயிற்சி நிறுவனங்கள் உருவான காரணத்தினால் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழையெளிய மாணவர்கள் வெளிநாடுகளில் மருத்துவம் பயின்று வருகிறார்கள். அதுபோன்று, பிலிப்பைன்ஸ் நாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வந்த இறுதியாண்டில், 6 மாதங்கள் இருக்கிற தருவாயில், ஒன்றிய அரசு கொரோனா காலத்தில் அதிகமாகத் தொற்று பரவுகின்ற காரணத்தினால்* Vande Bharat Mission *என்கின்ற திட்டத்தின்கீழ் விமானங்களை அனுப்பி, அவர்கள் அனைவரையும் இந்தியாவிற்குக் கொண்டு வந்தது. அதுபோன்று, தமிழ்நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு வந்தார்கள். வந்தவர்கள் மீண்டும் அந்தக் கல்லூரியோடு* online*–லே அந்தப் பயிற்சியை முடித்து, கல்வியை நிறைவு செய்தார்கள். அதற்குப் பிறகு, ஒன்றிய அரசினுடைய தேர்வுமுறை* AIIMS *மருத்துவமனை வழிகாட்டுதலோடு டெல்லியில் நடத்தப்படுகிறது. அந்தத் தேர்வில் அவர்கள் தேர்வெழுதி, அதிலும் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் முழு மருத்துவராக வேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் இருக்கிற மருத்துவக் கல்லூரிகளில், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில்* Internship *ஓராண்டு செய்ய வேண்டும். அதற்கு அவர்கள்* apply *செய்கின்றபோது, நம்முடைய மருத்துவக் கல்லூரியினுடைய இயக்குநரகம், 'இவர்கள் 5, 6 மாதம்* online*–லே அந்தக் கல்வியைக் கற்றிருக்கிறார்கள். ஆதலால், இவர்களுக்கு* Internship *வழங்கக் கூடாது' என்று இந்த நிமிடம் வரையில் மறுதலித்திருக்கிறது. ஆக, அவர்கள் கற்ற அந்த ஐந்தரை ஆண்டு கல்வியும் நாசமாகிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. எப்படி வெளிநாட்டில் படித்த நம்முடைய மாணவர்களை தமிழ்நாட்டிலிருந்து குழுக்களை*

2022 ஏப்ரல் 19] [திரு. தி. வேல்முருகன்]

அனுப்பி பத்திரமாக மீட்டு வந்து, ஒன்றிய அரசோடு பேசி அவர்கள் மருத்துவக் கல்வியைத் தொடர்வதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்களோ, அதேபோன்று இன்று பிலிப்பைன்ஸில் படித்த மாணவர்கள் 6 மாத காலம் online–ல் படித்திருக்கிறார்கள்; தேர்ச்சிப் பெற்றிருக்கிறார்கள். Medical Council of India வைத்த தேர்விலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தொடர்ந்து Internship செய்வதற்கு அவர்களுக்கு உதவ வேண்டும். Internship என்பது ஓராண்டு காலம் நம்முடைய மக்களுக்கு சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பு.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் உரையை முடித்துவிடுகிறேன். ஆகவே, அந்த நிலையை உருவாக்க வேண்டும். சீனா போன்ற நாடுகளிலிருந்து வந்த மாணவர்களுக்கும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. இங்கே கட்டணம் கட்ட முடியாததால்தான் வெளிநாடுகளுக்கு சென்று படிக்கிறார்கள் அதோடு, தமிழ்நாட்டில் இருக்கிற கல்லூரிகளில், மாவட்ட மருத்துவமனைகளில் Internship செய்ய வேண்டுமென்றால், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே ரூபாய் ஐந்து இலட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றனர். மாவட்ட மருத்துவமனைகளிலே ரூபாய் இரண்டரை இலட்சம் செலுத்த வேண்டுமென்று சொல்கின்றனர். அந்த ஏழை மாணவர்களுடைய அந்தக் கட்டணத்தையும் பாதியாகக் குறைத்து, நம்முடைய மக்களுக்கு சேவை செய்ய வருகின்ற அந்த மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு முன்வர வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவை தவிர்த்து மற்ற வெளிநாடுகளில் படிக்கிற, இளநிலை மருத்துவப் படிப்புகளுக்காகப் படிக்கிற மாணவர்களைப் பொறுத்தவரையில், சீனா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் படித்த மாணவர்களுக்கு இங்கே Internship செய்வதில் பிரச்சினை இருப்பது என்பது உண்மை. கட்டாய மருத்துவ உட்சுழற்சி பயிற்சி என்கின்ற அந்தப் பயிற்சி இங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் என்பது இன்றைக்கு துறை ரீதியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவர்களைப் பொறுத்தவரை, அங்கு படிப்பை முடித்தவுடன், இங்கே FMGE என்று சொல்லப்படுகிற Foreign Medical Graduates Examination என்கின்ற ஒரு தேர்வினை எழுத வேண்டும். தேர்வு எழுதி முடித்ததற்குப் பிறகு, அவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பெயர்களைப் பதிவு செய்து, பதிவிற்குப் பின்னர் இந்த Compulsory Rotating Medical Internship–CRMI என்று சொல்லப்படுகிற அந்தப் பயிற்சிக்கு செல்ல வேண்டும். பயிற்சிக்கு செல்கிற அந்த வழி என்பது நீண்ட நெடிய நாட்களாக இருந்து வந்தது. கடந்த நவம்பர் திங்கள் 18 ஆம் தேதி பத்து சதவிகித மாணவர்கள், வெளிநாடுகளில் பயின்றவர்களுக்கு Internship செய்யலாம் என்கின்ற அந்த வசதியை ஏழரை சதவிகிதமாகக் குறைத்துவிட்டார்கள். தமிழகத்தில் இன்றைக்கு இருக்கிற மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 36. ஏழரை சதவிகிதமாகக் குறைத்ததன் அடிப்படையில், 384 மாணவர்களை internship–க்கு அனுப்பலாம். இந்தக் குறைப்பு வந்தவுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இது மிகப் பெரிய அளவிலான பாதிப்பை மாணவர்களின் மத்தியில் ஏற்படுத்தும்; எனவே பத்து சதவிகிதம் என்றிருந்ததை ஏழரை சதவிகிதமாக குறைத்தது தவறு; வெளிநாடுகளில் படித்த மாணவர்கள் Internship செய்வதை 20 சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமென்கின்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசிடம் விடுத்தார்கள். ஆனால், கோரிக்கையை விடுத்ததற்குப் பிறகும்கூட, அது நடைபெறாத சூழலில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1–4–2022 அன்று டெல்லிக்கு நேரடியாகச் சென்று, ஒன்றிய அரசின் பிரதமரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள்.

2022 ஏப்ரல் 19] [திரு. மா. சுப்பிரமணியன்]

இன்னமும் அதற்கு சரியான தீர்வு காணப்படவில்லை. அப்படித் தீர்வு காணப்பட்டால் 1,010 மாணவர்கள் இன்றைக்கு Internship செய்வதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது என்பது, சீனாவிலும், பிலிப்பைன்ஸிலும் படித்த மாணவர்கள் பேரிடர் காலத்தில் online–ல் படித்ததனால் அவர்களை இன்றைக்கு Internship–க்கு ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது நமது அரசு செய்தது அல்ல; அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிற நடவடிக்கை. குறிப்பாக, இந்த மாணவர்களைப் பொறுத்தவரையில், அதுமாதிரியான ஒரு சூழல் வந்தவுடன் உயர் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பளிக்கப்பட்டது. அதாவது 2021, ஜூலைத் திங்கள் 29 ஆம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து வந்த தீர்ப்பு. இந்த மாணவர்கள் வேறு வழியில்லாமல் online–ல் படித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு Internship தருவதில் எந்தவிதமான தயக்கமும் காட்டக் கூடாது என்று உயர் நீதிமன்றம் சொன்னது. ஆனால், உடனடியாக ஒன்றிய அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. சென்னை உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிற அந்த கூற்றிலிருந்து மாறி, online–ல் படித்தவர்களை இங்கே Internship செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்று ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்தில் affidavit போடுகிறது. இப்படி ஒன்றிய அரசு affidavit போட்டதன் காரணமாக 2021, செப்டம்பர் திங்கள் 20 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஒரு தடையாணையைப் பிறப்பித்திருக்கிறது. அந்தத் தடையாணையின்படி இன்றைக்கு பிலிப்பைன்ஸ், சீனா போன்ற வெளிநாடுகளில் படித்த மாணவர்கள் Internship செய்வதில் பிரச்சினை இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், பிரதமர் அவர்களையும் நேரடியாகச் சந்தித்து இன்றைக்கு இருக்கிற ஏழரை சதவிகிதத்தை இருபது சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமென்கிற அந்த விஷயத்தையும் தாண்டி, online–ல் படித்தவர்களும் இங்கே Internship செய்வதற்கு வசதி செய்து தர வேண்டுமென்கின்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். நிச்சயம் அது நடைபெறும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.